# என்டோமெட்ரியோசீஸம் நீங்களும்

## என்டோமெட்ரியோசிஸ் என்பது என்ன?

என்டோமெட்ரியோசிஸ் என்பது-கா்ப்பப்பையின் **வெளிப்புறம்** மற்றும் அருகிலுள்ள சூலகங்கள், கருக் குழாய்கள், சிறுநீா்ப்பை அல்லது குடல்களில் என்டோமெட்ரியம்-(கா்பப்பையின் உள்தோல்), வளரும் ஒரு நிலை ஆகும். ஒரு நிலையாகும். வழக்கமாக என்டோமெட்ரியம் கா்ப்பப்பையை கா்ப்பம் தரிப்பதற்கு தயாா் செய்வதற்காக தடிமனாகிறது. கா்ப்பம் ஏதும் நடைபெறவில்லை என்றால் என்டோமெட்ரியம் உதிா்ந்து, கா்ப்பபையை விட்டு மாதவிடாயின் போல ரத்த ஓட்டமாக யோனி வழியே வெளியேறுகிறது. என்டோமெட்ரியோசிஸ்ல் கா்ப்பபையின் வெளியே உள்ள என்டோமெட்ரியல் திசு அதே வழியில் செயல்படுகிறது. அது தடினமாகிறது மற்றும் உதிா்க்கிறது ஆனால் வெளியேறித் தப்பிச் செல்ல வழக்கமான இடமில்லாததால் உடலால் உறிஞ்சிக் கொள்ளப்படவேண்டும் 10 முதல் 20 சதவீதம் குழந்தை பிறக்கும் வயதுள்ள பெண்களைப் பாதிக்கும் இந்த நிலை மிகவும் பொதுவானது. வழக்கமாக இது இனப்பெருக்க வருடங்களில் மட்டும் நிகழ்கிறது மற்றும் பருவ காலத்தில் ஆரம்பிக்கக்கூடும். சில நேரங்களில் இது மலட்டுத்தன்மையை உண்டாக்கலாம் (கா்ப்பமாவதில் சிரமம்).




## என்டோமெட்ரியோசிஸ் அறிகுறிகள் என்ன?

என்டோமெட்ரியோசிஸின் பொதுவான அறிகுறி **வலி** ஆகும். மாதவிடாய்க் காலங்களின் முன் மற்றும்/அல்லது அச்சமயங்களில் வலி ஏற்படுகிறது. பாலியல் செயல்பாடுகளின் பொழுதுகூட இது நேரலாம். சில பெண்களுக்கு என்டோமெட்ரியோசிஸ் வலி மிகத் தீவிரமாய் இருக்கக்கூடும்-சிலநேரம் சிலருக்கு வலியே இருக்காது. பரவலாக இல்லாவிட்டாலும், நீங்கள் சிறுநீா் கழிக்கையில் அல்லது குடல் அசைவுகளினால் வலி உணரலாம்,முதுகின் கீழ்ப்பக்கம் வலி, பெரும் உதிரப் போக்கு அல்லது அசதி. ஒரு கா்ப்பத்தைத் தொடா்ந்து அறிகுறிகள் வழக்கமாக நன்றாகி விடும் மற்றும் மாதவிடாய் இறுதியாக நின்றதும் வழக்கமாக மறைந்து விடும்.

## என்டோமெட்ரியோசிஸ் எவ்வாறு கண்டுபிடிப்பது?

என்டோமெட்ரியோசிஸ் ஐ உணா்த்தும் அறிகுறிகள் உங்களுக்கு இருந்தால், உங்கள் உடல்நலக் காப்பாளா் அறிகுறிகளைப் பற்றிக் கேள்விகள் கேட்பாா். ஒரு உடல் மற்றும் கூபகப் பரிசோதனை செய்வாா். ஒரு மருத்துவா (வழக்கமாக ஒரு மகளிா் மருத்துவநிபுணா்) ஒரு லேபரோஸ்கோபி என்னும் அறுவை முறையின் மூலம் என்டோமெட்ரியோசிஸ் ஐ க் கண்டறியக்கூடும். (தொப்புள்) அருகே சிறு துளை வழியே இது செய்யப்படுகிறது-மருத்துவா் ஒரு சிறிய காமிராவைப் பயன்படுத்தி என்டோமெட்ரியோசிஸ் இருக்கிறதா-எங்கே உள்ளது எனப் பாா்ப்பாா்.

## என்டோமெட்ரியோசிஸைக் குணப்படுத்துவது எப்படி?

என்டோமெட்ரியோசிஸ்க்கு சிகிச்சை அளிக்கலாம் ஆனால் குணப்படுத்த முடியாது. வலிக்கு உதவவும் மற்றும் கர்ப்பமாகும் திறன் மேம்படுத்த (கர்ப்பமாகும் தன்மை) சிகிச்சைகள் பயன்படுத்தப்படுகின்றன. சிகிச்சைகள் என்பது மருந்துகள் கொடுத்தல், அறுவை சிகிச்சை, அல்லது இரண்டுமே இணைந்து செய்வது உள்ளடக்கியது. சிகிச்சைக் தேர்வு- உங்கள் அறிகுறிகள், உங்கள் வயது மற்றும் கர்ப்பம் உண்டாகும் விருப்பம் சார்ந்தது. மிதமான அறிகுறிகள் அல்லது அறிகுறிகளே இல்லாதிருந்தால் சிகிச்சை தேவைப்படாது. .வலியைக் கட்டுப்படுத்த, மருந்துக்கடை கவுன்டர்களில் கிடைக்கும் இபுபுரோபென் (Advil® மற்றும் பிற) அல்லது அசிடாமினேபெண் (Tylenol® மற்றும் பிற) இவையே சிகிச்சைக்குத் தேவைப்படுகின்றன. கர்ப்பம் அடைவதை விரும்பாத பெண்களுக்கு வலியைக் குறைக்கவும் இரத்த வெளியேறுவதைக் குறைக்கவும் நாளமில்லாச் சுரப்பு (ஹார்மோன்) மருந்துகள் பயன்படுகின்றன. மருந்துகளில் கர்ப்பத்தடை மாத்திரைகள், (பேட்ச்சுகள்) ஒட்டும் துண்டுகள், யோனிவளையம், கர்ப்பபைக்குள் செலுத்தப்படும் கருவி புரொஜெஸ்டிரான் Mirena® - அல்லது புரொஜெஸ்டின்கள் (உதாரணமாக Provera®, Depo-Provera®) உள்ளடங்கியவை வலிமையான மருந்துகள் (Danazol, Lupron®, Synarel® மற்றும் Zoladex®) இவையும் சிலநேரங்களில் அவசியம். மருந்துகள் மூலம் வெற்றி விகிதம் 60-90% ஆகும். மருந்து மூலம் சிகிச்சை உதவிகரமாக இல்லையென்றால் அல்லது நீங்கள் கர்ப்பம் அடைய விரும்பினால் அறுவை சிகிச்சைக்கு சிபாரிசு செய்யப்படலாம். என்டோமெட்ரியோசிஸ் நோயறியவும் மற்றும் சிகிச்சையளிக்கவும் லேபரோஸ்கோபி அறுவை சிகிச்சை சில நேரங்களில் அவசியமாகிறது. இவ்வகையான அறுவை சிகிச்சையில் என்டோமெட்ரியோசிஸ் காணப்பட்டு, அழிக்கப்பட்டும் விடலாம். மிகத் தீவிரமான கேஸ்களில் மட்டும் வலிக்கு உதவ கடைசி வழியாக மட்டும் கர்ப்பபை நீக்க அறுவை சிகிச்சை செய்யப்படலாம். பல்வகையான அறுவை சிகிச்சைகளில் வெற்றி விகிதம் 45-90% வரை உள்ளது.

## கடைசி வார்த்தை

என்டோமெட்ரியோசிஸ் மிகவும் பரவலானது. அதற்கு தீர்வு நிலை நீக்கம் கிடையாது. ஆனால் பல திறன் வாய்ந்த சிகிச்சைகள் உள்ளன. உங்கள் உடல்நலக் காப்பாளருடன் உங்களுக்குரிய சிறந்த தேர்வுகளை விவாதிக்க பேசுங்கள்.

www.benignuterineconditions.ca

Ontario Women's Health Council

Ontario College of Family Physicians

Centre for Effective Practice
Department of Family and Community Medicine
University of Toronto

© 2005. எல்லா உரிமைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டவை.

இந்த தகவல், தகவல் நோக்கத்திற்கு மட்டுமே- தொழில்ரீதியான மருத்துவ புத்திமதி, நோயறிதல் அல்லது சிகிச்சைக்கு மாற்று அல்ல. உங்கள் ஆரோக்கிய நலக் காப்பாளரிடம் ஒரு குறிப்பிட்ட மருத்துவ நிலைக்கு ஆலோசனை செய்யவும்.

இந்த ஆவணம் உருவாக ஒண்டாரியோ பெண்கள் ஆரோக்கிய கவுன்சில் (Ontario Women's Health Council) நிதி அளித்தது. ஒண்டாரியோ பெண்கள் ஆரோக்கிய கவுன்சில்- (Ontario Women's Health Council) ஆரோக்கிய மற்றும் நீண்ட கால கவனிப்பு அமைச்சரவையால் முழுவதுமாக நிதி பெற்றதாகும். இந்த ஆவணம்--ஆரோக்கிய மற்றும் நீண்ட கால கவனிப்பு அமைச்சரவையின் சம்மதத்தை அவசியமாகப் பிரதிபலிக்கத் தேவையில்லை.